


**29. 07. 2026**

தலைப்புச் செய்திகள்

1. பொதுத்தேர்வு முறைக்கேடுகள் தடுப்பு சட்டத்திருத்த மசோதா மீதான விவாதம் மக்களவையில் 2-வது நாளாக இன்று தொடர்ந்து நடைபெறுகிறது.

2. தமிழக சிறை மற்றும் சட்டத்துறை தொடர்பான பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை கூட்டம் முதலமைச்சர் திரு. விஜய் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

3. பருவமழை காலத்திற்கு முன்னரே வெள்ளத்தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகளை விரைந்து முடிக்க மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த், அலுவலர்களை அறிவுறுத்தினார்.

4. தமிழ்நாட்டில் 151 உயர் சிறப்பு மருத்துவ இடங்களை தற்போதைய த.வெ.க. அரசு இழக்கச் செய்திருப்பதாக தி.மு.க. தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

5. காமன்வெல்த், பளு தூக்கும் பிரிவு இறுதிப் போட்டிகளில் இந்திய வீரர்கள் இன்று களமிறங்குகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம் - ராகுல் காந்தி

பொதுத்தேர்வு முறைக்கேடுகள் தடுப்பு சட்டத்திருத்த மசோதா மீதான விவாதம் மக்களவையில் இன்று 2-வது நாளாக மீண்டும் தொடங்கி உள்ளது.

இந்த விவாதத்தின் மீது பேசிய மக்களவை எதிர் கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் இளைஞர்களின் உணர்வுகளுக்கு, அனைத்து அரசியல் கட்சிகளும் மதிப்பளிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

மாணாக்கரின் போராட்டத்தில் எவ்வித தவறும் இல்லை என்றும், அதுகுறித்து ஒவ்வொரு இந்தியனும் பெருமிதம் கொள்ள வேண்டுமென்று அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய ஜனதாதள் உறுப்பினர் திரு. திலேஷ்வர், பேசுகையில், நாட்டின் கல்வி முறையில் வெளிப்படைத் தன்மையை அதிகரித்து மாணாக்கரின் பிரகாசமான எதிர்காலத்தை இம்மசோதா உறுதி செய்வதாக கூறினார்.

இந்த மசோதாவிற்கு எதிர்ப்பு தொ◌ிவித்து பேசிய R.S.P. கட்சியை சேர்ந்த திரு. N. K. பிரேமச்சந்திரன், எந்த நோக்கத்திற்காக இந்த மசோதா கொண்டுவரப் பட்டதோ, அதற்கான அம்சங்கள் இதில் இல்லை என்று குறைகூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

முன்னதாக நீட் விவகாரத்தில், போராட்டத்தில் ஈடுபட்ட மாணாக்கர் மீது காவல்துறையினர் தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் பிரச்சனையில் எதிர் கட்சிகளின் அமளி காரணமாக மாநிலங்களவை பிற்பகல் 2 மணி வரையிலும்,

மக்களவை நண்பகல் 12 மணிவரையிலும் இன்று ஒத்திவைக்கப்பட்டன.

ஒரே நாடு ! ஒரே தேர்தல் ! தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் கால அவகாசத்தை நீட்டிப்பதற்கான தீர்மானத்தை இக்குழுவின் தலைவரும், பி.ஜே.பி. உறுப்பினருமான திரு. பி.பி. சௌத்ரி மக்களவையில் கொண்டு வந்தார்.

குரல் வாக்கெடுப்பு மூலம் இந்த தீர்மானம் நிறைவேறியது.

மாநிலங்களவையில் நிலக்கரி, கனிமம், எஃகுத்துறை சார்ந்த நாடாளுமன்ற நிலைக்குழுவின் அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

மக்களவை தொடர்ச்சி

மக்களவையில் பிறப்பு, இறப்பு, பதிவு, சட்டத்திருத்த மசோதா 2026 இன்று அறிமுகம் செய்யப்பட்டது.

உள்துறை இணையமைச்சர் திரு. நித்தியானந்த ராய் இதனை அறிமுகம் செய்தார்.

1969-ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு, பதிவு சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரும் வகையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

பிறப்பையும், இறப்பையும், தாமதமாக பதிவு செய்வதை தடுத்து உரிய நேரங்களில் பதிவு செய்வதை ஊக்குவிக்க இம்மசோதா வகை செய்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம் - கிரண் ரிஜிஜு

இதனிடையே நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, காங்கிரஸ் உறுப்பினர்கள் பொதுத்தேர்வு முறைக்கேடுகள் தடுப்பு சட்டத்திருத்த மசோதாவில் இடம் பெற வேண்டிய அம்சங்கள் குறித்து பேசாமல் அரசியல் பிரச்சனைகளை பேசியதாக குறை கூறினார்.

மாணவர்களின் கோரிக்கையை ஏற்று அவர்களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் இந்த சட்டத்திருத்த மசோதா கொண்டுவரப் பட்டிருப்பதாகவும் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

சர்வதேச புலிகள் தினம்

சர்வதேச புலிகள் தினம் இன்று கொண்டாடப் படுவதை ஒட்டி வன உயிரின ஆர்வலர்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தொிவித்துள்ளார்.

உலகளவில் புலிகள் எண்ணிக்கையில் 70 சதவிகிதம் நம்நாட்டில் இருப்பதாக பிரதமர் சமூக வலைதளப்பதிவில் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

புலிகள் பாதுகாப்பில் முக்கிய பங்காற்றும் வன அலுவலர்கள், விஞ்ஞானிகள், பாதுகாப்பாளர்களின் முயற்சியை பிரதமர் பாராட்டியுள்ளார்.

இந்நாளையொட்டி மாபெரும் கதை சொல்லும் போட்டி நெல்லையில் நடைபெற்றது.

பள்ளி கல்லூரி மாணாக்கர் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் இதில் கலந்து கொண்டதாக எமது செய்தியாளர் தொிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழக சிறை மற்றும் சட்டத்துறை தொடர்பான பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை கூட்டம் முதலமைச்சர் திரு. விஜய் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் சிறை மரணங்கள் தடுப்பு, உள்கட்டமைப்பு மேம்பாடு குறித்து ஆய்வு நடத்தப்பட்டது.

கிராமப்புற மக்களுக்கு கட்டணமில்லா ஆலோசனை வழங்கும் ஆலோசகர்களுக்கு கவுரவ நிதி வழங்குவது குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது.

சிறைகளில் செய்ய வேண்டிய அடிப்படை கட்டமைப்பு மேம்பாடுகள்,

நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்கும் வகையில் உள்ளூர் நீதிமன்றம் அமைப்பது,

மாவட்ட அளவில் அரசு வழக்கறிஞர்கள் நியமனம் குறித்தும் விரிவான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாநில சட்ட அமைச்சர் திரு. நிர்மல் குமார், சிறைத்துறை காவல்துறை தலைவர் திரு. சந்தீப்ராய் ரதோர், துறை சார்ந்த அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

முன்னதாக TNPSC தொகுதி – 1 பணிகளுக்கு தேர்வான 78 பேருக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் வழங்கினார்.

அதேபோல் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வான 48 பேருக்கும் நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் மெட்ரோ

சென்னை ஓமாந்தூரார் அரசினர் தோட்டம் முதல் நந்தனம் வரை மெட்ரோ ரயிலில் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் இன்று ஆய்வு செய்கிறார்.

சென்னை கத்திபாராவில் நடைபெறும் மெட்ரோ கட்டுமானப் பணிகளையும் அவர் பார்வையிடவுள்ளார்

❖❖❖❖❖❖❖❖❖❖

ஆனந்த்

தமிழ்நாட்டில் பருவமழை காலத்திற்கு முன்னரே வெள்ளதடுப்பு முன்னெச்சரிக்கை பணிகளை விரைந்து முடிக்க மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

சென்னையில் பள்ளிக்கரணை மற்றும் வேளச்சேரி ஏரிகளை தூர்வாரி சீரமைக்கும் பணிகளை இன்று தொடங்கிவைத்த அவர், ஏரியில் ஆகாயத்தாமரை, மிதவை தாவரங்கள் மற்றும் மிதவை பொருட்களை அகற்றும் பணிகளை பார்வையிட்டார்.

நீர்வளத்துறை மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனம் இணைந்து மேற்கொள்ளும் இப்பணிகளால் சென்னை பெருநகராட்சிக்குட்பட்ட பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தை சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ள பாதிப்புகள் குறையும் என்று அரசு கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

மு.க. ஸ்டாலின்

தமிழ்நாட்டில் 151 உயர் சிறப்பு மருத்துவ படிப்பு இடங்களை தற்போதைய த.வெ.க. அரசு இழக்கச் செய்திருப்பதாக தி.மு.க. தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ்நாட்டிற்கான சூப்பர் ஸ்பெஷாலிட்டி இடங்கள், அகில இந்திய தொகுப்பிற்கு மாற்றப்படுவதை எதிர்த்து கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்ற வலியுறுத்தியும், அதை செய்யாதது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த இவ்வழக்கில் அரசு நியமித்த மூத்த வழக்கறிஞர்கள் ஆஜராகவில்லை என்பதை சுட்டிக்காட்டிய அவர், நியாயம் நம் பக்கம் இருந்தும், நீதிமன்றத்தில் வலுவான வாதங்களை எடுத்து வைக்காமல் சரணடைந்து விட்டதாக குறை கூறினார்.

அகில இந்திய மருத்துவ கலந்தாய்வின் இரண்டாம் சுற்று நடைபெறுவதற்கு முன்னரே, மாநில கலந்தாய்வை அவசரமாக நடத்தி 151 இடங்கள் காலியாக உள்ளதாக அறிவித்தது குறித்து அவர் கேள்வி எழுப்பினார்.

எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் தொண்டாற்ற இருந்த 151 உயர் சிறப்பு அரசு மருத்துவர்களை இழந்திருப்பது குறித்து த.வெ.க. அரசு உரிய விளக்கத்தை நம் மருத்துவர்களுக்கும், மக்களுக்கும் அளிப்பதன் அவசியத்தை திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

D.K. சிவக்குமார்

மேகதாது அணை விவகாரத்தில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து கர்நாடக முதலமைச்சர் திரு. D. K. சிவக்குமார் அம்மாநில சட்ட நிபுணர்களுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

மேகதாது அணைக்கான திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை மத்திய நீர்வள ஆணையத்திடம் வழங்குவது குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டதாக தொிகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

TNPSC Group – 1

தமிழக அரசு பணிகளுக்கான TNPSC Group – 1 தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் இன்றுடன் நிறைவடைகிறது.

துணை ஆட்சியர், வணிக வரித்துறை உதவி ஆணையர் உட்பட 26 காலிப்பணியிடங்களை நிரப்பும் வகையில் இத்தேர்வு நடைபெறுகிறது.

வரும் 2-ம் தேதி முதல் 4-ம் தேதிவரை விண்ணப்பங்களில் திருத்தம் மேற்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

குற்றாலம்

மேற்குதொடர்ச்சி மலைப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழைக் காரணமாக கோவை குற்றால அருவியில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் சுற்றுலா பயணிகள் குளிக்க இன்று தற்காலிக தடை விதித்துள்ளதாக வனத்துறையை மேற்கோள் காட்டி எமதுசெய்தியாளர் தொ ிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கோவில்

மதுரை அருள்மிகு கள்ளழகர் திருக்கோவில் ஆடி பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் தேரை வடம்பிடித்தாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

காமன்வெல்த்

கிளாஸ்கோ காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளின் 7-வது நாளான இன்று, பதக்கம் வெல்லும் முனைப்புடன் இந்திய தடகள வீரர்கள் களமிறங்குகின்றனர்.

நீளம் தாண்டுதல் இறுதிப் போட்டியில் முரளி ஸ்ரீசங்கரும்,

3 ஆயிரம் மீட்டர் தடை தாண்டும் போட்டியின் மகளிர் பிரிவில் பருள் சௌத்ரியும்,

மகளிர் பளு தூக்கும் 77 கிலோ எடைப்பிரிவில் சஞ்சனாவும் இன்று களமிறங்குகின்றனர்.

ஏற்கனவே இந்தியா பதக்கபட்டியலில் 12 பதக்கங்களுடன் 9-வது இடத்தில் உள்ள நிலையில் மேலும் இந்தியா பல பதக்கங்களை இன்று தட்டிச்செல்லும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖